


05.07.2024

தலைப்புச் செய்திகள்

1. ஒலிம்பிக் போட்டிகளை 2036ஆம் ஆண்டு நம் நாட்டில் நடத்துவதற்காக கட்டமைப்பு மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. உலகளாவிய பாதுகாப்பு உற்பத்தி மையமாக இந்தியாவை உருவாக்க அரசு உறுதிபூண்டிருப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

3. தென்காசி மாவட்டம் கடனா நதி அணையிலிருந்து கார் சாகுபடிக்காக இன்று தண்ணீர் திறக்கப்பட்டது.

4. கள்ளச்சாராயம், தொடர்பான முறைகேடுகளை ஒழிக்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, அஇஅதிமுக பொதுச்செயலர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

5. விம்பிள்டன் கிரான்ஸ்லாம் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் 2-வது சுற்றில் ரோஹன் போபண்ணா - எப்டன் இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

பிரதமர் காணொலி

பாரீஸில் வரும் 26ஆம் தேதி தொடங்க உள்ள ஒலிம்பிக் போட்டியில் இந்திய விளையாட்டு வீரர்கள் பல வெற்றிகளை குவித்து இந்தியாவிற்கு

பெருமை சேர்ப்பார்கள் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க உள்ள இந்திய விளையாட்டு வீரர் வீராங்கனைகளுடன் காணொலி மூலம் இன்று கலந்துரையாடிய பிரதமர், வீரர்களின் இலக்கு வெற்றியாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்த இலக்கை எட்ட தடையாக உள்ள குறைகளையும், புகார்களையும், புறம்தள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சியும், நிலைத்தன்மையும், முறையான தூக்கமும் அவசியம் என்றும் சுட்டிக்காட்டினார்.

தத்தம் திறமைகளில் முழு நம்பிக்கை வைத்து பயிற்சிகளை மேற்கொள்ள பிரதமர் அறிவுறுத்தினார்.

ஆக்கப்பூர்வமான மன நிலையும், தொலைநோக்கு பார்வையும் வெற்றிக்கு அவசியம் என்று அவர் எடுத்துரைத்தார்.

விளையாட்டு வீரர்கள் தங்களது பழைய சாதனைகளை தகர்த்து, புதிய சாதனைகளை படைக்க பிரதமர் வாழ்த்து தெரிவித்தார்.

பாரீஸில் உள்ள இந்திய வம்சாவளியினர் இந்திய தடகள வீர வீராங்கனைகளை எளிதில் தொடர்பு கொள்ளும் வகையில் மத்திய அரசு புதிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

2036ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை இந்தியா நடத்துவதற்கான கட்டமைப்பு மேம்பாடு உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் இந்தியா மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார்.

முன்னதாக பிரதமர் வெளியிட்ட சமூக வலைதள பதிவில் விளையாட்டு வீரர்களின் வாழ்க்கை வரலாறும் வெற்றியும் 140 கோடி இந்தியர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் என்று கூறியுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

ராஜ்நாத்சிங்

உலகளாவிய பாதுகாப்பு உற்பத்தி மையமாக இந்தியாவை மேம்படுத்துவதற்கான சாதகமான நடவடிக்கைகளை உருவாக்க அரசு

உறுதிபூண்டிருப்பதாக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ராணுவ உற்பத்தி சென்ற நிதியாண்டில் ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 887 கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்துள்ளதை தமது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள அமைச்சர் பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் இந்தியாவில் தயாரிப்போம் திட்டம் ஆண்டுதோறும் புதிய சாதனைகளை படைத்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு தொடர்பான பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட, உற்பத்தி சார்ந்த பிரிவுகளையும், தனியார் தொழிற்சாலைகளையும் அமைச்சர் பாராட்டியுள்ளார்.

பாதுகாப்பு உற்பத்தி வளர்ச்சி அதிகரித்திருப்பதற்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்திருக்கிறார்.

இந்த வளர்ச்சி உத்வேகம் அளிப்பதாக தமது சமூக வலைதளத்தில் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஜே.பி.நட்டா

மகப்பேரின் போது தாய் - சேய் உயிரை காப்பதில் உலகளாவிய சராசரியை விட இந்தியா பெரும் முன்னேற்றத்தை எட்டியிருப்பதாக மத்திய சுகாதார குடும்ப நலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் தாய் சேய் நலவாரிய கூட்டத்தில் காணொலி மூலம் உரையாற்றிய அமைச்சர், பெண்கள், குழந்தைகள் மற்றும் வளர் இளம் பருவத்தினரை காக்க இந்த வாரியம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை பாராட்டினார்.

உலகின் தென்னாடுகள் மற்றும் வடநாடுகள் இடையே சமச்சீரான வளர்ச்சியை உருவாக்க இந்தியாவின் பங்களிப்பை சுட்டிக்காட்டினார்.

இந்த வாரியத்தின் பங்களிப்பு நாடென்ற முறையில் பாலின சமத்துவம், இளைஞர் பங்களிப்பு, மகளிர் குழந்தைகள் நலத்தை முன்னெடுத்துச்செல்லவதில் இந்தியா அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விரிவான சுகாதார திட்டங்களால் நீடித்த வளர்ச்சிகான இலக்குகளை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் இந்தியா எட்டும் என்று அவர் உறுதியளித்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ரிஷி சுனக்

பிரிட்டன் நாடாளுமன்ற தேர்தலில் தொழிலாளர் கட்சி 326 இடங்களுக்கு மேல் வெற்றிபெற்று அறுதி பெரும்பான்மை பெற்றுள்ள நிலையில் அக்கட்சியின் க்ஹேர் ஸ்டார்மர் புதிய பிரதமராக பதவி ஏற்கிறார்.

இந்த தேர்தலில் பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சி தோல்வியை தழுவியுள்ளது.

இதனை அடுத்து 10 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் தொழிலாளர் கட்சி ஆட்சி அமைக்க உள்ளது.

கடைசியாக கிடைத்த தகவலின்படி மொத்தமுள்ள 650 இடங்களில் 410 இடங்களை தொழிலாளர் கட்சி கைப்பற்றியுள்ளது.

மாற்றத்திற்காக மக்கள் வாக்களித்திருப்பதாகவும், அந்த மாற்றம் தற்போது தொடங்க இருப்பதாகவும் பிரதமராக பதவி ஏற்க உள்ள க்ஹேர் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார்.

தோல்விக்கு பொறுப்பேற்பதாக பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் தெரிவித்துள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர்

திருவள்ளூர் மாவட்டம் கீழச்சேரி அரசு உதவிபெறும் பள்ளியில் பள்ளி மாணாக்கருக்கான காலை உணவு விரிவாக்க திட்டத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வரும் 15ஆம் தேதி தொடங்கிவைக்கிறார்.

ஊரக பகுதிகளில் இயங்கிவரும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 2 லட்சத்து 20 ஆயிரம் குழந்தைகள் பயன்பெறும் வகையில் 600 கோடி ரூபாய் மதிப்பில் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்படுகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர் நிதி உதவி

திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர் அருகே கோட்ட கச்சேரியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து 2 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் பெற்றோருக்கு 50 ஆயிரம் ரூபாய் நிதி உதவியும் வழங்கப்படும் என்று கூறியுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

தங்கம் தென்னரசு

விருதுநகர் மாவட்டம் வெம்பகோட்டையில் நடைபெற்று வரும் அகழாய்வு பணியில் நாயக்கர் கால செப்புக்காசு கண்டெடுக்கப்பட்டுள்ளதாக மாநில நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

கி.பி.16ஆம் நூற்றாண்டை சேர்ந்த மன்னர் வீரப்ப நாயக்கர் காலத்தில் இந்த நாணயம் புழக்கத்தில் இருந்ததாக அமைச்சர் தமது சமூக வலைதள பதிவில் கூறியுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

எடப்பாடி

தமிழ்நாட்டில் கள்ளச்சாராயம், மெத்தனால் பதுக்கல் போன்ற முறைகேடுகளை ஒழிக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, அஇஅதிமுக பொதுச்செயலர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து வருவதாக குற்றம் சாட்டினார்.

உள்ளாட்சி அமைப்புகளில் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அவர் கோரினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ராமதாஸ்

கர்நாடக மாநிலத்தில் உள்ள அணைகள் நிரம்பி வருவதால் காவிரியில் தண்ணீர் திறக்க தமிழக அரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று பா.ம.க நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் வழக்கமாக ஜூன் 12ஆம் தேதி திறக்கப்பட வேண்டிய மேட்டூர் அணை இதுவரை திறக்கப்படாததால் காவிரி பாசன மாவட்டங்களில் சாகுபடி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

சம்பூர்ணதா

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்ட வட்டங்களில் மத்திய அரசின் சம்பூர்ணதா விழிப்புணர்வு பிரச்சார இயக்கம் இன்று நடைபெறுகிறது.

இதன்படி அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம்,

ராமநாதபுரம் மாவட்டம் - திருவாடணை,

ராணிப்பேட்டை மாவட்டம் – திமிரி

விருதுநகர் மாவட்டம் - திருச்சுழியில் இந்த இயக்கம் இன்று தொடங்கப்படுகிறது.

திருச்சுழி வட்டாரத்தை சேர்ந்த ஊராட்சி தலைவர்களுக்கான திட, திரவ கழிவு மேலாண்மை திட்டத்தை சிறப்பாக முன்னெடுத்துச்செல்வது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெயசீலன் தலைமையில் சிறப்பு பயிற்சி முகாம் இன்று நடைபெற்றது.

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பத்தில் இன்றுமாலை சம்பூர்ணதா அபியான் திட்டம் தொடங்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

--- வாய்ஸ்

நாட்டின் 112 மாவட்டங்களின் 500 வட்டங்களில் வரும் செப்டம்பர் 30-ம் தேதிவரை மத்திய அரசு சார்பில் நடைபெற இந்த இயக்கத்தின் கீழ் மத்திய நல திட்டங்களை செயல்படுத்தி வட்ட அளவில் வளர்ச்சயை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்படுகின்றன.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

தண்ணீர் திறப்பு

தென்காசி மாவட்டம் கடனா நதி நீர்த்தேக்கத்திலிருந்து கார்பருவ சாகுபடிக்காக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கமல்கிஷோர் இன்று தண்ணீர் திறந்து வைத்தார்.

119 நாட்களுக்கு வினாடிக்கு 125 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

இதன் மூலம் அரசபத்துகால், ஆழ்வார்குறிச்சி, ஆம்பூர், காக்கநல்லூர்கால் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 3 ஆயிரத்து 787 ஏக்கர் நிலங்கள் நேரடியாக பாசன வசதிபெறும்.

மேலும் பிரம்மதேசம், பள்ளக்கால், புதுக்குடி, கீழஆம்பூர், மன்னார்கோவில், சிவசைலம் உள்ளிட்ட கிராமங்களில் உள்ள விவசாய நிலங்களும் பயனடையும்.

கார் சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டதை அடுத்து விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதேபோல் கிருஷ்ணகிரி அணையிலிருந்து முதல்போக பாசனத்திற்காக இன்றுமுதல் 130 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் மழை காரணமாக மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு ஆயிரத்து 281 கன அடியாக அதிகரித்துள்ளது.

குடிநீர் தேவைக்காக அணையிலிருந்து ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கப்படுகிறது.

அணையின் நீர்மட்டம் 39.67 அடியாகும்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

மாஞ்சோலை

நெல்லை மாவட்டம் மாஞ்சோலை பகுதிக்கு செல்ல சுற்றுலா பயணிகளுக்கு இன்றுமுதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

தூய்மை பணியாளர்கள்

தமிழகத்தில் தூய்மை பணியாளர்களுக்கு உரிய ஊதியம் வழங்காத 48 ஒப்பந்த நிறுவனங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக தேசிய துப்புரவு ஆணையத்தலைவர் திரு.வெங்கடேசன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல்லில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் துப்புரவு பணியாளர்களக்கு உரிய ஊதியம் வழங்கப்படுவது உறுதி செய்யப்படுவதாக கூறினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

டென்னிஸ்

லண்டனில் நடைபெறும் விம்பிள்டன் கிரான்ஸ்லாம் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் 2-வது சுற்றில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா - ஆஸ்திரேலியாவின் எப்டன் இணை இன்று மாலை ஜெர்மனி இணையுடன் மோதுகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

மகளிர் கிரிக்கெட்

இந்திய - தென்னாப்பிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது மகளிர் 20-20 கிரிக்கெட்போட்டி சென்னையில் இன்று இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

ஏற்கனவே இரு அணிகளுக்கு இடையே நடைபெற்ற 3 ஒருநாள் போட்டிகளிலும்,

ஒரு டெஸ்ட் போட்டியிலும் இந்திய அணி அபார வெற்றிபெற்றுள்ள நிலையில் 20-20 போட்டித்தொடரையும் வெல்லும் முனைப்புடன் இந்திய அணி களமிறங்குகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது